இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 333 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 30 – செவ்வாய்க்கிழமை 14 ஜூலை 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 333 : Thiruvalluvar Year - 2057 - Aani 30 - Tuesday 14 July 2026 - Dak 8 Pages ₹ 5.00

### தமிழ் இலக்கியத்திற்குப்

## பெரும்பங்காற்றியவர் மூத்த எழுத்தாளர் பூமணி!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!


**சென்னை, ஜூன். 14-**

**இயல்பான நடையில் வீரியமான படைப்புகளைத் தந்து தமிழ் இலக்கியத்துக்குப் பெரும் பங்காற்றியவர் மூத்த எழுத்தாளர் பூமணி என்று அவரது மறைவையொட்டி, வெளியிட்ட இரங்கல் செய்தியில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

கரிசல் நிலத்தின் மூத்த எழுத்தாளர்களுள் ஒருவரான பூமணி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு வேதனையடைந்தேன்.

கரிசல்காட்டு மக்களின் வாழ்க்கையையும் சமூகத்தில் நிலவிய கட்டமைப்புகளையும் மிக எளிமையான மொழியில் வெளிப்படுத்திய படைப்பாளராக பூமணி அவர்கள் திகழ்ந்தார். தமிழின் எந்த அகராதியிலும் பதிவாகாத பல வட்டார வழக்குச் சொற்கள்



அவரது படைப்புகள் மூலமாக ஆவணப்படுத்தப் பட்டன.

பூமணி அவர்களுக்கு சாகித்திய அகாதமி விருதினைப் பெற்றுத் தந்த 'அஞ்ஞாடி' எனும் புதினத்தின் தலைப்பும் கூட அத்தகையதே.

எழுத்தாளராக மட்டுமின்றி, 'கருவேலம்பூக்கள்' எனும் திரைப்படத்தையும் எழுதி இயக்கித் தமிழ்நாடு அரசின் விருதினைப் பெற்றிருக்கிறார். அவரது 'வெக்கை' நாவல் அசுரன் திரைப்படமாக மாறியபோது, மேலும் பல இளம் வாசகர்களும் பூமணியின் எழுத்துகளைப் படிக்கத் தொடங்கினர்.

அவரது எழுத்துப் பணிகளைப் போற்றும் வகையில், திராவிட மாடல் ஆட்சியில் 2022ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளில் பூமணி அவர்களுக்குக் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் குடியிருப்பு ஒதுக்கீட்டு ஆணையை வழங்கி மகிழ்ந்ததையும் நினைவுகூர்கிறேன்.

இயல்பான நடையில் வீரியமான படைப்புகளைத் தந்து தமிழ் இலக்கியத்துக்குப் பெரும் பங்காற்றிய பூமணி அவர்களை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இலக்கிய ஆர்வலர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## பொய் சொல்லியே பிழைப்பு ஓட்டும் கோயபல்ஸ் விஜய்!

### விஜய்யின் பொய்யும் - காவல்துறையின் விளக்கமும்!

*சென்னை, ஜூலை 14 -*

*கரூர் துயர சம்பவத்தில் இருந்து தப்பிக்க, மேடைக்கு மேடை பொய்மூட்டைகளை அவிழ்த்துவிடும் விஜய், தற்போது காவல்துறை மீது பழியை போட்டுள்ளார். 500க்கும் மேற்பட்ட போலீசார் உரிய பாதுகாப்பு அளித்தும், விஜய்யின் அலட்சியமே உயிரிழப்புக்கு காரணம் என சம்பவத்தின் போது போலீசார் அளித்த விளக்கம் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.*

*கடந்த ஆண்டு செப்டம்பர் 27ம் தேதி, கரூரில் நடிகர் விஜய் மேற்கொண்ட பிரச்சாரத்தின் போது, கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 500க்கும் மேற்பட்ட போலீசார் பல மணி நேரம் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோதும், பிரச்சாரத்திற்கு விஜய் மிகவும் தாமதமாக வந்ததும், போலீசாரின் பேச்சை மீறி, நிற்பதற்குக் கூட இடமில்லாத கட்டுங்கடங்காத கூட்டத்திற்கு நடுவே விஜய், தனது பிரச்சார வாகனத்தை கொண்டு சென்றதுமே உயிர்கள் பலியானதற்கு காரணம் என போலீசார் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டிருந்தது.*

*இவற்றை எல்லாம் மறைத்து, 41 பேர் உயிரிழப்புக்கு எந்த வகையிலும் இதுவரை மன்னிப்பு கோராத மனசாட்சி இல்லாத விஜய், தற்போது வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், வரம்புமீறி மேடைக்கு மேடை கோயபல்ஸ் தத்துவத்தை பின்பற்றி பேசி வருவது, பொதுமக்கள் மத்தியில் கோபத்தை உண்டாக்கியுள்ளது.*

*41 பேர் உயிரிழந்ததற்கு இரங்கல் கூட்டம் எனக் கூறிவிட்டு, கரூரில் இடைத்தேர்தலுக்கு பிரச்சாரம் செய்த கோயபல்ஸ் விஜய், கரூர் துயர சம்பவத்தில் போலீஸ் பாதுகாப்பு இருந்ததா? என பச்சையாக புளுகு மூட்டையை அவிழ்த்து விட்டு சிக்கியுள்ளார்.*

*பொய் சொல்லியே பிழைப்பு ஓட்டும் விஜய்க்கு, அன்றைய சம்பவத்தில் களத்தில் நின்று பணியாற்றிய காவல்துறையினர், பாதுகாப்பு அளித்தது குறித்து விளக்கம் அளித்திருந்தனர்.*

*வழக்கத்திற்கு மாறாக அதிகளவில் போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்ததாக, அப்போதைக்கு சட்டம் ஒழுங்கு ஏ.டி.ஜி.பி.யாக இருந்த டேவிட்சன் தேவாசீர்வாதம் பேட்டி அளித்திருந்தது தற்போது சமூக வலை தளங்களில் வைரலாகி வருகிறது.*

### த.வெ.க. குதிரைபேரம்: ஆதாரங்கள் – ஆவணங்களின் அடிப்படையில்

# முதல்வர் விஜய் மீது வழக்குப் பதிந்திட உத்தரவிடுக!

## ஆளுநரிடம் தி.மு.க. புகார் மனு!

**சென்னை, ஜூலை 14 -**

**த.வெ.க.வின் குதிரை பேரத்தை உறுதிப்படுத்தும் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கரின் பேச்சு குறித்து தி.மு.க. சார்பில் ஆளுநரிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் நடவடிக்கை எடுக்காவிட்டால் நீதிமன்றத்தை நாடுவோம் என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்துள்ளார்.**

தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆளுநர் அர்லேகரிடம் புகார் மனு ஒன்றை அளித்துள்ளார். அதில், சட்டவிரோதமான தூண்டுதல்கள் மற்றும் முறைகேடுகள் மூலம், ம.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை பதவி விலகுமாறு முதலமைச்சர் விஜய், வைகோவுடன் சேர்ந்து சதித்திட்டம் தீட்டியது குறித்து வழக்கு பதிவு செய்ய உத்தரவிடக் கோரி ஜூலை ஒன்றாம் தேதி தாம் அளித்த புகாரின் தொடர்ச்சியாக, இந்த மனுவை அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தி.மு.க. எம்.எல்.ஏ. அனிதா ராதாகிருஷ்ணனை பதவி விலகிவிட்டு, த.வெ.க.வில் இணையுமாறு காவல்துறை அதிகாரிகள் கட்டாயப்படுத்திய விவகாரம் குறித்து கடந்த 4ம் தேதி தனியாக புகார் அளித்ததையும், இதேபோல் நாகர்கோவில் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. ஆஸ்டின் கட்சித் தாவ தூண்டப்பட்ட சம்பவம் குறித்தும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

அ.தி.மு.க.வைச் சேர்ந்த 6 சட்டமன்ற உறுப்பினர்கள் அடுத்தடுத்து பதவி விலகி த.வெ.க.வில் இணைந்தனர் என்றும், இவர்களில் கரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர். விஜயபாஸ்கரும் ஒருவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், கடந்த 2ம் தேதி செய்தியாளர்களிடம் பேசிய எம்.ஆர். விஜயபாஸ்கர், "த.வெ.க. தரப்பில் இருந்து தங்களை அணுகினார்கள் என்றும் அதன் அடிப்படையில் த.வெ.க.வில் இணைந்ததாக வெளிப்படையாக ஒப்புக் கொண்டதையும் ஆர்.எஸ்.பாரதி சுட்டிக்காட்டி உள்ளார்.

விஜயபாஸ்கரின் இந்த ஒப்புதல் வாக்குமூலம் த.வெ.க. மற்ற கட்சி எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கும் குதிரை பேரத்தில் ஈடுபடுவதை உறுதிப்படுத்தி உள்ளதாகவும் இத்தகைய வெளிப்படையான குதிரை பேரம் குறித்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை விசாரணை நடத்த வேண்டும் என்றும், முதலமைச்சர் விஜய் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தனது மனுவில் வலியுறுத்தி உள்ளார்.

த.வெ.க.வின் இந்த நடவடிக்கைகள் அரசியலமைப்பு மற்றும் தேர்தல் நடைமுறைகளுக்கு எதிரானது என்றும் ஜனநாயகத்தின் அடித்தளத்தையே தகர்ப்பதுடன், வாக்காளர்களின் தீர்ப்புக்கு துரோகம் இழைப்பதுடன், கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் நோக்கத்தை சீர்குலைப்பதாக உள்ளதாகவும் ஆர்.எஸ். பாரதி தெரிவித்துள்ளார். தற்போது அளிக்கப்பட்டுள்ள புதிய ஆதாரங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில், வழக்கு பதிவு செய்ய ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநருக்கு ஆளுநர் உத்தரவிட வேண்டும் என்றும் ஆர்.எஸ்.பாரதி தனது மனுவில் வலியுறுத்தி உள்ளார்.

**உச்சநீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது!**

தொடர்ந்து தமது மனுவில்,

மேற்குறிப்பிடப்பட்ட புகாரில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளபடி, Lalita Kumari v. Government of Uttar Pradesh என்ற வழக்கில், தகவல்கள் ஒரு காவல்துறையால் நேரடியாகப் பதிவு செய்து விசாரிக்கக் கூடிய குற்றம் (Cognizable Offence) நிகழ்ந்திருப்பதை வெளிப்படுத்தினால், முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்வது கட்டாயம் என்று இந்திய உச்சநீதிமன்றம் தெளிவாகத் தீர்ப்பளித்துள்ளது. மேலும், இதில் சம்பந்தப்பட்ட நபர்களின் பதவி அல்லது செல்வாக்கு - அவர் ஒரு முதலமைச்சராக இருந்தாலும் கூட - சட்டத்தில் எந்தவித விதிவிலக்கிற்கும் இடமளிக்காது என்றும் நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.

தற்போது பதிவில் இடம்பெற்றுள்ள ஆதாரங்கள் - வைகோ அவர்கள் பொதுவெளியில் அளித்த ஒப்புதல், எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் பொதுவெளியில் அளித்த ஒப்புதல், மற்றும் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் அக்காலகட்டத்தில் வெளியிட்ட அறிக்கைகள் - இவை அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும்போது, காவல்துறையால் நேரடியாகப் பதிவு செய்து விசாரிக்க வேண்டிய குற்றங்கள் நிகழ்ந்திருப்பதை வெளிப்படுத்துகின்றன. எனவே, உடனடியாக முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்படுவது அவசியம் என்பதை அவை உறுதிப்படுத்துகின்றன.

**விசாரிக்கத்தக்க குற்றங்கள்!**

மேற்கூறிய சூழ்நிலைகளின் அடிப்படையில், ஆளுநர் அவர்கள், தமது கவனத்திற்கு தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய சான்றுகள் மற்றும் ஆவணங்களை, 1.7.2026 அன்று அளிக்கப்பட்டுள்ள புகாருடன் இணைத்துப் பரிசீலிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அவை அனைத்தும் முதற்கட்ட (Prima Facie) பார்வையிலேயே காவல்துறையால் நேரடியாகப் பதிவு செய்து விசாரிக்கத்தக்க குற்றங்கள் (Cognizable Offences) நிகழ்ந்திருப்பதை வெளிப்படுத்துகின்றன.

எனவே, அதற்கேற்ப ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை (Directorate of Vigilance and AntiCorruption - DVAC) இயக்குநருக்கு முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்து, சட்டப்படி தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு உத்தரவிடுமாறு ஆளுநர் அவர்களை மிகுந்த பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன். என்றும் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி குறிப்பிட்டுள்ளார்.

## ஆளுநர் நடவடிக்கை எடுக்காவிடில் நீதிமன்றத்தை நாடுவோம்!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

**சென்னை, ஜூலை. 14-**

**"விஜயின் குதிரை பேர அரசியல் குறித்து ஆளுநர் உடனடி நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் நீதிமன்றத்தை நாடுவோம்" என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் கூறியுள்ளார்.**

த.வெ.க. அரசின் குதிரை பேர ஊழல் பற்றி தி.மு.க. சார்பில் ஆளுநர் அவர்களிடம் மீண்டும் புகார் அளிக்கப்பட்டது குறித்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

கரூரில் முதல்வர் விஜய் பேசியது தொடர்பாக உச்ச நீதிமன்ற வழிகாட்டல் படி ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையிலான விசாரணைக் குழுவிடமும், CBI யிடமும் தி.மு.க. சார்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் முதல்வர்



விஜய் குதிரைபேர ஊழலில் ஈடுபட்டு உள்ளார் என்பதை வைகோ அளித்த வாக்குமூலம் அடிப்படையில் ஏற்கனவே கடந்த 4 ஆம் தேதி ஆளுநரைச் சந்தித்து ஆதாரத்தோடு புகார் அளித்தோம்.

அதேபோல விஜய பாஸ்கர் அவர்களும் வெளிப்படையாகவே செய்தியாளர் கூட்டத்திலே என்னை த.வெ.க.வில் வந்து சேரும்படி கேட்டுக்கொண்டார்கள், ஆகவேதான் நான் ராஜினாமா செய்கிறேன் என்று சொல்லி எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு அவரும் சேர்ந்துவிட்டார். ஆக இதெல்லாம் குதிரைபேர ஊழலுக்கு தகுந்த ஆதாரங்கள் என்பதை சுட்டிக்காட்டி ஆளுநரிடத்தில் இன்று மீண்டும் ஒருமுறை தி.மு.க.வின் சார்பில் புகார் கொடுத்திருக்கிறோம்.

**எச்சில் இலையை வைத்து விழா நடத்துகிறார்!**

விஜய் பேசும் போது கொத்து பரோட்டா என்றெல்லாம் கொச்சையாக பேசுகிறார். கரூர் விஜய பாஸ்கர், விராலிமலை விஜயபாஸ்கர் ஆகிய இருவருமே நாங்கள் சாப்பிட்டுப் போட்ட இரண்டு இலை தான் அதை த.வெ.க.வில் இணைத்துக் கொண்டுள்ளனர் என அ.தி.மு.க. வினரே விமர்சித்து உள்ளனர். ஆகவே எச்சில் இலையை வைத்து ஒரு விழா நடத்துகிறார்.

அதில் ஏற்கனவே வெளியிட்ட கரூர் அறநிலையத்துறை நிலம் தொடர்பான அரசாணையை ஏதோ இவரிடம் கோரிக்கை வைத்து அதன் பிறகு வெளியிடுவது போல ஒரு நாடகத்தை நடத்தி காட்டியுள்ளார். இந்த நாடகம் நடந்தது 10ஆம் தேதி, ஆனா 9 ஆம் தேதியே அதற்கான அரசாணை போடப்பட்டுவிட்டது. இது எவ்வளவு பெரிய பித்தலாட்டம், எவ்வளவு பெரிய நாடகம்.

ஆக இப்படிப்பட்ட நாடகங்களை இவர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் முடிவுகட்டுகிற வகையில் தி.மு.க. நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். குதிரை பேர புகாரின் பேரில் ஆளுநர் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் நீதிமன்றத்தை நாடுவோம்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

